O.S.49/2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:24.01.2025

PW2: மாதவன் த/பெ– குருசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் வாதியின் உறவினர் என்றால் வியாபார நிமித்தமாக பழக்கம். நான் பட்டாசு வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு வாதியும், அவரது கணவரும் பழக்கம். எனது ஊர் சிவகாசி. வாதி எனது உறவினர் என்று சொன்னால் சரிதான். எனக்கு வாதியின் கொடுக்கல், வாங்கல் அனைத்தும் தெரியும் என்றால் தெரியாது. கடன் கொடுக்கும் சமயத்தில் நான், வாதி, பிரதிவாதி, பிரதிவாதியின் கணவர் இருந்தோம். கடன் கொடுத்ததாக சொல்லும் காலம் 2014ம் வருடம். 2014ம் வருடத்திய ஆவணம் குறித்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் வாதியின் வீட்டிற்கு 2014 ம் வருடத்திலும், அதன் பின்னரும் எத்தனை முறை சென்றுள்ளேன் என்று கேட்டால் பல முறை சென்றுள்ளேன், குறிப்பிட்டு கூற முடியாது. புரோநோட்டை காட்டி கேட்டால் அதன் விபரங்கள் எனக்கு சொல்ல தெரியும். நான் புரோநோட்டில் எழுதியதும், சாட்சியுமான என்ற இடத்தில் கையெழுத்து போட்டுள்ளேன். புரோநோட்டில் உள்ள வாசகங்களுக்கும், எனது கையொப்பத்திற்கும் மை வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள வாசகங்கள் பேனா மையினாலும், சாட்சிகளின் கையொப்பங்கள் பந்துமுனை பேனாவினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புரோநோட்டின் முன்னும், பின்னும் உள்ள 3 கையொப்பங்களும் பிரதிவாதியின் கையொப்பங்கள் இல்லை

என்றும், அவற்றில் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவரால் ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புரோநோட்டின் பின்புறம் காலவரம்பிற்காக மேற்குறிப்பு செய்யப்பட்ட இடத்தில் உள்ள பிரதிவாதியின் கையொப்பம் மற்றும் அதில் உள்ள வாசகங்கள் வெவ்வேறு பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புரோநோட்டின் பின்புறம் உள்ள பிரதிவாதியின் கையெழுத்து எங்கள் வசதிக்காக உருவாக்கப்பட்டதால் வேறுபாடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2017 ல் புரோநோட்டில் உள்ள பிரதிவாதி இட்டதாக உள்ள கையெழுத்திற்கும், 2020 ல் உள்ள கையெழுத்தின் நீட்டம் மற்றும் எஸ் என்ற எழுத்தில் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் இரண்டுமே பிரதிவாதி தான் கையெழுத்து செய்தார். பிரதிவாதியின் கணவர் பத்திரம் வாதி வசம் உள்ளது பற்றி எனக்கு தெரியும். அந்த விபரம் பற்றி இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. அந்த பத்திரம் எப்போது கொடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. வாதிக்கும், பிரதிவாதிக்கும் உள்ள கடன் ஒரே கடனாக தான் நான் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எவ்விதமான கடனும் பிரதிவாதி, வாதியிடம் இருந்து பெறவில்லை என்றும், அவர் எனது உறவினர் என்ற அடிப்படையில் பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட்டு புதுப்பிப்பு மற்றும் வாதி சார்ந்த விசயங்கள் எனக்கு தெரியாது என்றும், வாதி உருவாக்கிய விசயத்திற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கையெழுத்திற்கும், புரோநோட்டில்

உள்ள கையெழுத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லாததால் பிரதிவாதி கடனை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.